அரசு மேல்நிலைப்பள்ளி கருவேப்பிலங்குறிச்சி

கரைசல்கள்

[ER/159]

I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நீரில் கரைக்கப்பட்ட உப்புக் கரைசல் என்பது _____ கரைவை
   - அ. ஒருபடித்தான
   - ஆ. பலபடித்தான
   - இ. ஒருபடித்தான மற்றும் பல்படித்தானவை
   - ஈ. ஒருபடித்தானவை அல்லாதவை
2. இருமடிக்கரைசலில் உள்ள கூறுகளின் எண்ணிக்கை _____
   - அ. 2 ஆ. 3
   - இ. 4 ஈ. 5
3. கீழ்கண்டவற்றுள் எது சர்வக்கரைப்பான் எனப்படுவது _____
   - அ. அசிட்டோன் ஆ. பென்சீன்
   - இ. நீர் ஈ. ஆல்கஹால்
4. குறிப்பிட்ட வெப்பநிலையில், குறிப்பிட்ட அளவு கரைப்பானில் மேலும் கரைபொருளை கரைக்க முடியாதோ அக்கரைசல் _____ எனப்படும்.
   - அ. தெவிட்டிய கரைசல்
   - ஆ. தெவிட்டாத கரைசல்
   - இ. அதி தெவிட்டிய கரைசல்
   - ஈ. நீர்த்த கரைசல்

5. நீரற்ற கரைசலை அடையாளம் காண்க
   - அ. நீரில் கரைக்கப்பட்ட உப்பு
   - ஆ. நீரில் கரைக்கப்பட்ட குளுக்கோஸ்
   - இ. நீரில் கரைக்கப்பட்ட காப்பர் சல்பேட்
   - ஈ. கார்பன் – டை– சல்பைடில் கரைக்கப்பட்ட சல்பர்
6. குறிப்பிட்ட வெப்பநிலையில், அழுத்தத்தை அதிகரிக்கும் போது நீர்மத்தில் வாயுவின் கரைதிறன் _____.
   - அ. மாற்றமில்லை ஆ. அதிகரிக்கிறது
   - இ. குறைகிறது ஈ. வினை இல்லை
7. 100 கி நீரில் சோடியம் குளோரைடின் கரைதிறன் 36 கி. 25 கி சோடியம் குளோரைடு 100 மிலி நீரில் கரைத்த பிறகு மேலும் எவ்வளவு உப்பை சேர்த்தால் தெவிட்டிய கரைசல் உருவாகும் _____.
   - அ. 12 கி ஆ. 11 கி இ. 16 கி ஈ. 20 கி
8. 25% ஆல்கஹால் கரைசல் என்பது _____
   - அ. 100 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால்
   - ஆ. 25 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால்
   - இ. 75 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால்
   - ஈ. 25 மிலி நீரில் 75 மிலி ஆல்கஹால்
9. ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் உருவாகக் காரணம் _____
   - அ. ஈரம் மீது அதிக நாட்டம்
   - ஆ. ஈரம் மீது குறைந்த நாட்டம்
   - இ. ஈரம் மீது நாட்டம் இன்மை
   - ஈ. ஈரம் மீது மந்தத்தன்மை
10. கீழ்கண்டவற்றுள் எது நீர் உறிஞ்சும் தன்மையுடையது _____
    - அ. ∴பெரிக் குளோரைடு
    - ஆ. காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்
    - இ. சிலிக்கா ஜெல்
    - ஈ. இவற்றுள் எதுமில்லை

5. வெப்பநிலை அதிகரிக்கும் போது கனகளவு சதவீதம் குறைகிறது. ஏனெனில் _____

II. பொருத்துக.

1. நீல விட்ரியால் – $CaSO_4 \cdot 2H_2O$
2. ஜிப்சம் – CaO
3. ஈரம் உறிஞ்சிக் கரையவை – $CuSO_4 \cdot 5H_2O$
4. ஈரம் உறிஞ்சி – $NaOH$

IV. சரியா? தவறா? (தவறு எனில் கூற்றினை திருத்துக)

1. இருமடிக்கரைசல் என்பது மூன்று கூறுகளைக் கொண்டது.
2. ஒரு கரைசலில் குறைந்த அளவு (எடை) கொண்ட கூறுக்கு கரைப்பான் என்று பெயர்.
3. சோடியம் குளோரைடு நீரில் கரைந்து உருவாகும் கரைசல் நீரற்ற கரைசலாகும்.
4. பச்சை விட்ரியாலின் மூலக்கூறு வாய்பாடு $MgSO_4.7H_2O$
5. சிலிகா ஜெல் காற்றிலிருந்து ஈரப்பதத்தை உறிஞ்சிக் கொள்கிறது. ஏனெனில் அது ஒரு ஈரம் உறிஞ்சும் தன்மை கொண்ட சேர்மம் ஆகும்.

V. சுருக்கமாக விடையளி.

1. கரைசல் – வரையறு
2. இருமடிக்கரைசல் என்றால் என்ன?
3. கீழ்கண்டவற்றுக்கு தலா ஒரு எடுத்துக்காட்டு தருக. i) திரவத்தில் வாயு ii) திரவத்தில் திண்மம் iii) திண்மத்தில் திண்மம் iv) வாயுவில் வாயு
4. நீர்க்கரைசல் மற்றும் நீரற்ற கரைசல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
5. கனகளவு சதவீதம் – வரையறு.

ஆக்கம்; ரா.மணிகண்டன் பட்டதாரி ஆசிரியர்

அரசு மேல்நிலைப்பள்ளி கருவேப்பிலங்குறிச்சி

கரைசல்கள்

ஆக்கம்; ரா.மணிகண்டன் பட்டதாரி ஆசிரியர்